[23rd January 1965

UNSTARRED QUESTIONS.

திருச்சி மத்திய சிறைச்சாலை

1 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி சிறையில் உள்ள சமையல் செய்யும் இடம் உடனடியாக ரிப்பேர் செய்யப்பட வேண்டுமென சிறை பார்வையாளரில் ஒருவர் குறிப்பெழுதியுள்ளார் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

பதில்.—(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(*a*) No.

(*b*) Does not arise.

பச்சைமலையில் விவசாய அபிவிருத்தி

2 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சைமலையில் விவசாய அபிவிருத்திக்கான பரிசீலனை செய்ய குழு ஒன்று மேற்படி மலைக்குச் சென்றதா?

(இ) ஆம் எனில் அந்தக் குழு சர்க்காருக்கு சமர்ப்பித்த அறிக்கையின் விவரம் என்ன ?

பதில்.—(அ), (இ): அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட எந்தக் குழுவும் அந்த இடத்திற்குச் சென்றதில்லை. எனினும், சேலம் மாவட்டம், ஆத்தூரிலுள்ள உதவித் தோட்டக்கலைஞர் (Assistant Horticulturist) அப்பகுதியில் தோட்ட வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயும் பொருட்டு அந்தக் குன்றுகளை சர்வே செய்யும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் அந்த இடத்தைப் போய் பார்த்துவிட்டார். அவரது அறிக்கையின் மீது தோட்டக் கலைஞரின் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி மாநில வேளாண்மைத் துறை நெறியாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(*a*) & (*b*) No official committee has visited the place. The Assistant Horticulturist, Attur, Salem, however, was asked to survey the hills to explore the possibilities of developing horticulture in that region. He has completed his inspection. The remarks of the Horticulturist on his report have been called for by the State Director of Agriculture.

கேரள மாநிலத்திற்கு அரிசி விற்பனை

3 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

1964 ஜனவரி முதல் ஜூலை முடிய நமது மாநிலத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு எவ்வளவு அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது?

பதில்.—நம் அரசாங்கத்தில் இருக்கும் தகவல் பிரகாரம் 3,70,985 மெட்ரிக் டன்கள் 1964 ஜனவரி முதல் ஜூலை வரை கேரளாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

23rd January 1965]

மதிய உணவுத் திட்டம்

4 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ம் வருடம் ஏப்ரல் மாதம் 30-ம் தேதியில் நடைபெற்ற தென் வேலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக்கூட்டத்தில், '' மதிய உணவுத் திட்டத் திற்குப் பஞ்சாயத்தும், பொது மக்களும் தர வேண்டிய 4 பைசா தரத் தயங்குவதால் லோகல் செஸ் சார்ஜ் வரியை அதிகமாக்கி, அந்நான்கு பைசாக்களையும் பஞ்சாயத்து யூனியனே தந்துவிடலாம் என்று நிறைவேறிய தீர்மானம் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா?

(இ) அதன்மீது எடுத்த முடிவு யாது?

பதில்.—(அ), (இ) : இந்தத் தீர்மானம் அரசாங்கத்தின் கவனத் துக்குக் கொண்டுவரப்படவில்லை. ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் இத் தீர்மானத்தின்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக, அதன் நகல் ஒன்றைப் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு அனுப்பியுள்ளார்.

(*a*) & (*b*) The Resolution was not brought to the notice of the Government but the District Collector has communicated a copy of the resolution to the Panchayat Union Councils for suitable action.

பஸ் ரூட்டுகள் (வட ஆற்காடு)

5 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டிருக்கும் மொத்த பஸ் ரூட்டுகள் எத்தனை?

(இ) அவற்றுள் கட்டுப்படி ஆகாது எனத் திருப்பித் தரப்பட்ட ரூட்டு கள் எத்தனை?

பதில்.—(அ) 1964-ம் வருடம் டிசம்பர் மாதம் 1-ம் தேதியில் இருந்தபடி 232.

(இ) எவையுமில்லை.

(*a*) 232 (as on 1st December 1964).

(*b*) Nil.

நெடுஞ்சாலைத் துறையின் தாற்காலிகப் பணியாளர்கள்

6 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :**
திரு. செ. சீனிவாசன் : } கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் கேங் கூலிகள் இருபது முப்பது ஆண்டுகள் பணிபுரிந்தாலும் நிரந்தரமாக்கப்படாமலும் சம்பள உயர்வு போன்றவை தரப்படாமலும் இருப்பது உண்மையா?

(இ) அந்நிலையை மாற்றி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

பதில்.—(அ) நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையில் பணிபுரியும் அவினியு மஸ்தூர்கள் (avenue mazdoors) உட்பட காங் மஸ்தூர்கள் (gang mazdoors) அன்றாடக் கூலிபெறும் தாற்காலிக பணியாளர்கள். இவர்களது அன்றாட கூலியை கணக்கிட்டு அதை மாதத்துக்கு ஒருமுறை கொடுக்கிறார்கள். இவர்களைத் தொடர்ந்து வேலையில் வைத்துக்கொள்வது

மதிப்பீடுகளில் தொகை ஒதுக்கப்படுவதைப் பொறுத்துள்ளது. மேலும் அவர்களின் எண்ணிக்கையையும் உறுதியாய் சொல்லமுடியாது. எனவே அவர்களை வேலை நிதியிலிருந்து ஊதியம் பெறும் பணியாளர்களாகவும் (workcharged establishment) கருத முடியாது. பின்னர் சொன்ன ஊழியர்களையே மாநில அரசாங்க ஊழியர்களாக உறுதிப்படுத்த முடியும்.

காங் மஸ்தூர்களுக்கு 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் தேதி முதற் கொண்டு ரூ. 5 ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டது. 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியிலிருந்து மேலும் ரூ. 5 ஊதிய உயர்வு அளிக்கப் பட்டது. 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு மீண்டும் ரூ. 2 ஊதிய உயர்வு அவர்களுக்கு வழங்கப்பட்டது அண்மை யில் கூட அதாவது 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதியிலிருந்து அவர்களது ஊதியம் மற்றொரு முறையும் ரூ. 3·50 அதிகமாக்கப்பட்டது. காங் மஸ்தூர்களுக்கு அவ்வப்போது ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளதை மேற்சொன்ன விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

(இ) இல்லை.

(*a*) The gang mazdoors of the Highways and Rural Works Department including the avenue mazdoors are casual workers on daily wages, though paid monthly. As the continued employment of these workers depends on provisions made in the estimates and as their strength cannot also be ensured, they cannot be considered as workcharged establishment entitled to provincialisation, i.e., confirmation, etc.

Regarding increase in wages of gang mazdoors, an *ad hoc* increase of Rs. 5 has been granted with effect from 1st June 1960. A further increase of Rs. 5 was sanctioned with effect from 1st July 1962. Another increase of Rs. 2 was also sanctioned with effect from 1st June 1964. A further increase of Rs. 3.50 P. has recently been sanctioned to them with effect from 1st September 1964. Thus the emoluments of the gang mazdoors have been increased from time to time adequately.

(*b*) No.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விசைத் தறிகள்

7 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மொத்த விசைத் தறிகள் எத்தனை?

பதில்.—1964-ம் வருடம் செப்டம்பர் மாதம் முடிய மொத்தம் 7,502 விசைத் தறிகள் தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வட ஆற்காடு மாவட்டத்தில் தொழிலபிவிருத்தி

8 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964 செப்டம்பர் 15, 16 தேதிகளில், வடாற்காடு மாவட்டம் வேலூரில் நடைபெற்ற தொழில் கருத்தரங்கில் அம்மாவட்டத்தில் அமைப்பதற்கு எந்தெந்த தொழில்களுக்கு வாய்ப்பு இருப்பதாக கண்டறியப்பட்டது

23rd January 1965]

A. From the discussions it emerged that there is scope for the establishment of the following industries in North Arcot district :—

Large-scale Industries.

1. Composite workshops for machine building, structural engineering, etc.
2. Fruit and vegetable processing and canning.
3. A second sugar factory.
4. An industrial alcohol distillery.
5. Chemical industries such as Barium Chemicals.
6. Manufacture of glue and gelatine from tannery waste.

Small-scale Industries.

1. Glass blowing unit.
2. Cycle accessories unit.
3. Fruit juices, jams, etc.
4. Spare parts for textile mills.
5. Electrical industries.
6. Machine tools and forge shops.
7. Radio assembly.
8. Mineral crushing plants.
9. Battery-operated toys.
10. Standardised doors and windows.
11. Miscellaneous industries like manufacture of link clips, stone rollers, printing rollers and dyes.

போலீஸ் இலாகாவிற்கு குதிரைகள்

9 கேள்வி—புலவர் கா. கோவிந்தன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) போலீஸ் இலாகாவிற்கு வாங்கப்படும் குதிரைகள் எங்கிருந்து வாங்கப்படுகின்றன ?

(இ) இவ் வகையில் ஆண்டொன்றிற்குச் சராசரி எவ்வளவு பணம் செலவாகிறது ?

பதில்.—(அ) (1) மாநில அரசாங்க விலங்கின ஆராய்ச்சி நிலையம், ஓசூர்.

(2) சென்னை ரேஸ் கிளப்.

(3) ரேஸ் குதிரைகள் வைத்துள்ள தனி நபர்கள்.

(4) டில்லியில் உள்ள புகழ்பெற்ற குதிரை வியாபாரிகள்.

(இ) ரூ. 5,440.

[23rd January 1965

(*a*) (1) State Government Livestock Research Station, Hosur.

(2) Madras Race Club.

(3) Private individuals owning race horses.

(4) Reputed dealers in horses in Delhi.

(*b*) Rs. 5,440.

Quarries

137 *Q.*—Sri K. CHEEMAICHAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of quarries in Madurai and Ramanathapuram districts?

A.—The number of quarries in Madurai and Ramanathapuram districts is furnished below :—

	Madurai	*Ramanathapuram.*
1. Number of stone quarries	300	7
2. Number of sand quarries	..	1
3. Others	..	16

மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கல் வெட்டியெடுக்கும் மணல் தோண்டியெடுக்கும் இடங்களின் எண்ணிக்கை கிழே கொடுக்கப் பட்டுள்ளது.

		மதுரை.	இராமநாதபுரம்.
(1)	கல்வெட்டியெடுக்கும் இடங்களின் எண்ணிக்கை.	300	7
(2)	மணல் தோண்டியெடுக்கும் எண்ணிக்கை.	..	1
(3)	மற்றவை ..	..	16

Dental Surgery (appointment of Professors)

11 *Q.*—Sri K. CHEEMAICHAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of persons appointed as Professors in the State in Dental Surgery from other States; and

(*b*) if so, on what basis?

A.—(*a*) One.

(*b*) He was selected by Madras Public Service Commission for appointment as Reader in Periodontia in accordance with the rules.

(அ) ஒருவர் நியமிக்கப்பட்டார்.

(இ) இவர் தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கமிஷனால் பல்நோய் சிகிச்சைச் சிறப்புப் பேராசிரியராகத் (Reader in Periodontia) தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது நியமனம் விதிகளை அனுசரித்தே செய்யப் பட்டது.

23rd January 1965]

பி. ஈ. பட்டப் படிப்பு

12 கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ல் நம் மாநிலத்திலுள்ள இஞ்சினியரிங் கல்லூரிகளில் சேர எத்தனை மாணவர்கள் மனுபோட்டார்கள் ?

(இ) எத்தனை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் ?

(உ) மற்ற மாநில மாணவர்களுக்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப் பட்டன ?

(எ) மற்ற மாநிலங்களிலிருந்து எத்தனை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் ?

பதில்—தமிழ்நாட்டுத் தொழிற்கல்வி நெறியாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆறு பொறியியற் கல்லூரிகளிலும் நடத்தப்படும் பி.ஈ. பட்டப்படிப்பு பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன—

	ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பொறியியல் பட்டப்படிப்பு.	பி.எஸ்.சி. தேறியவர்களுக்கான மூன்றாண்டு பொறியியல் பட்டப்படிப்பு.
(அ)	3,159	311
(இ)	1,093	160
(உ)	21 (அயல்நாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட ஐந்து இடங்களையும் சேர்த்து)	..
(எ)	7 (அயல் நாட்டு மாணவர்களையும் சேர்த்து)	..

The figures are furnished below in respect of the B.E. Course conducted in the six Engineering Colleges under the control of the Director of Technical Education, Madras.

	Five year integrated course in Engineering.	*Three year course for Bachelor of Science.*
(*a*)	3,159	311
(*b*)	1,093	160
(*c*)	21 (including five seats allotted for foreign countries)	
(*d*)	7 (including students from foreign countries)	

Leprosy

13 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon the Minister for Public Health be pleased to state—

(*a*) the details of incidence of leprosy, districtwise in the State ;

(*b*) the measures taken to control the disease; and

(*c*) the details of proposals for increasing the facilities of the treatment of leprosy patients?

[23rd January 1965

A.—(*a*) The incidence of leprosy districtwise in the State is as follows :—

(1)	South Arcot	About 3 to 5	per cent.
(2)	Chingleput	About 1 to 3	,,
(3)	North Arcot	About 2 to 4	,,
(4)	Salem	About 1 to 3	,,
(5)	Thanjavur	About 1 to 2	,,
(6)	Madurai	About 1 to 2	,,
(7)	Tiruchirappalli	About 1 to 2	,,
(8)	Tirunelveli	About 1	,,
(9)	Ramanathapuram ...	About 1 to 2	,,
(10)	Coimbatore	About 1	,,
(11)	Kanyakumari	About 1.5	,,

Nilgiris district is not endemic for leprosy and no precise figures can be given for Madras City as it has a large amount of floating population.

(b) The old method of segregating leprosy patients in Sanatoria is not adopted now since this is not a practical and feasible method in our country where there are too many patients. The modern method is to take treatment to the patients in their villages by means of mobile Leprosy Units, and thus bring under treatment as many patients as possible. This will result in reducing the potential of infection and thus the number of new cases would come down gradually by DDS treatment and ultimately the disease can be controlled. Simultaneously the entire population of the area of work, is examined in the houses to find out the exact incidence of leprosy. The public are also educated about leprosy so that, they know the true facts about leprosy and also co-operate with the Medical Authorities in the successful implementation of the scheme. There are many Leprosy Control Units working throughout the State on the above principles. There are at present two kinds of such units. One type of unit is covering a population of $1\frac{1}{2}$ lakhs and smaller units cover a population of 20,000. There are 21 bigger type of units called Leprosy Control units and 16 smaller type of units called Survey Education and Treatment units. The units are distributed among various districts according to the need of the place.

(*c*) Before the end of the Third Five-Year Plan, 60 more units are proposed to be opened, to cover more places endemic for leprosy. The Government have also instructed all District Medical Officers and Panchayats to see that leprosy treatment is made available to all the patients free of charge at the General Medical Institutions in the State. During the Fourth Five-Year Plan it is proposed to open more Control Units and Survey Education and Treatment Units and Training Centres. Thus the Government have proposals to cover the entire endemic part of the State with Leprosy relief units in the near future.

23rd January 1965]

(அ) இம் மாநிலத்தில் தொழுநோய் பரவியிருப்பதற்கான மாவட்ட வாரியான விவரம் பின்வருமாறு:—

1. தென் ஆர்க்காடு சுமார் 3 முதல் 5 சத வீதம்.
2. செங்கற்பட்டு சுமார் 1 முதல் 3 சத வீதம்.
3. வட ஆர்க்காடு சுமார் 2 முதல் 4 சதவீதம்.
4. சேலம் சுமார் 1முதல் 3 சத வீதம்.
5. தஞ்சாவூர் சுமார் 1 முதல் 2 சத வீதம்.
6. மதுரை சுமார் 1 முதல் 2 சத வீதம்.
7. திருச்சிராப்பள்ளி சுமார் 1 முதல் 2 சத வீதம்.
8. இராமநாதபுரம் சுமார் 1 முதல் 2 சத வீதம்.
9. திருநெல்வேலி சுமார் 1 சத வீதம்.
10. கோயம்புத்தூர் சுமார் 1 சத வீதம்.
11. கன்னியாகுமரி சுமார் 1·5 சத வீதம்.

நீலகிரி மாவட்டம் தொழுநோய் பரவுவதற்கு ஏற்றதல்ல. சென்னை மாநகரில் வந்துபோகும் மக்கள் தொகை ஏராளமாய் இருப்பதால், அங்குள்ள தொழு நோயாளியின் எண்ணிக்கையைச் சரியாகக் கொடுப்பதற்கில்லை.

(இ) நலம்பேண் மருத்துவ மனைகளில் (Sanatoria) தொழு நோயாளிகளைத் தனிப்படுத்தி வைக்கும் பழைய முறையை இப்போது கடைப்பிடிப்பதில்லை. ஏனெனில் நம் நாட்டில் இப் பிணியாளர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாயிருப்பதால், இது நடைமுறைக்கு சாத்தியமற்றது. இயங்கும் தொழுநோய் சிகிச்சை வண்டிகளை அந்தந்த கிராமங்களுக்கு எடுத்துச் சென்று எத்தனை நோயாளிகட்குச் சிகிச்சை அளிக்க முடியுமோ அத்தனை பேருக்கும் சிகிச்சை அளிப்பதுதான் நவீன முறையாகும். இதனுல் இந்த நோயின் தொற்றுத் திறன் குறைகிறது. 'DDS' சிகிச்சையின் மூலம் இந்நோய் புதிதாகத் தோன்றுவதும், படிப்படியாகக் குறையும். நாளடைவில் இந்நோயையும் கட்டுப்படுத்திவிடலாம். அதே சமயத்தில் சிகிச்சைப் பகுதியிலுள்ள மக்கள் அனைவருடைய வீடுகளுக்கும் சென்று தொழுநோய் அவர்களிடையே எந்த அளவுக்குப் பரவியுள்ளது என்பதும் கண்டறியப்படுகிறது. தொழுநோய் பற்றிய உண்மைகளைப் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லி, இத் திட்டத்தை வெற்றிகரமாய் நிறைவேற்றுவதற்கு மருத்துவத் துறை அதிகாரிகளுடன் அவர்களது ஒத்துழைப்பும் வேண்டப்படுகிறது. மேற்சொன்ன கோட்பாடுகளில் தொழுநோய்க் கட்டுப்பாடு யூனிட்டுகள் பல, இம்மாநிலம் முழுமையிலும் பணியாற்றி வருகின்றன. இப்போது அத்தகைய இரண்டு வகையான யூனிட்டுகள் இருக்கின்றன. ஒருவகையான யூனிட்டு $1\frac{1}{2}$ லட்சம் மக்கள் தொகையினருக்குச் சிகிச்சையளித்து வருகின்றது. சிறு யூனிட்டுகள் ஒவ்வொன்றும் 20,000 பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கின்றன. பெரிய வகையான யூனிட்டுகள் 21 இருக்கின்றன. அவைகளுக்கு தொழுநோய்க் கட்டுப்பாடு யூனிட்டுகள் என்று பெயர். 16 சிறிய யூனிட்டுகள் உள்ளன. அவைகட்கு தொழுநோய் சர்வே, சிகிச்சை யூனிட்டுகள் என்று பெயர். அந்தந்த மாவட்டத்தின் தேவைக்கேற்றவாறு பற்பல மாவட்டங்களுக்கும் இந்த யூனிட்டுகள் பிரித்துவிடப்பட்டுள்ளன.

(உ) மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள், மேலும் 60 யூனிட்டுகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொழுநோய் பரவுவதற்கேற்ற இன்னும் பல இடங்களில் இவை பணியாற்றும். இம் மாநிலத்தில் உள்ள எல்லா பெரிய மருத்துவ நிலையங்களிலும் எல்லாத் தொழு நோயாளிகளுக்கும் இலவச தொழு நோய்ச் சிகிச்சை கிடைக்குமாறு பார்த்துக்கொள்ளும்படி எல்லா மருத்துவ அதிகாரிகளுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்சொன்ன பெரிய யூனிட்டுகளையும் சிறிய யூனிட்டு

[23rd January 1965

களையும் மேலும் ஏற்படுத்தவும் பயிற்சி நிலையங்களைத் தொடங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில், தொழு நோய் சிகிச்சை யூனிட்டு களைக் கொண்டு இம்மாநிலத்தில இந்நோய் பரவுவதற்கேற்ற இடங்கள் முழுவதற்கும் இனிமேல் பணியாற்றும் திட்டங்களை அரசாங்கம் வகுத்துள்ளது.

நாதஸ்வரக் கலை

14—கேள்வி. திரு. மு. கருணாநிதி : கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சங்கீதக் கலை, நாடகக் கலை, ஆகியவைகளுக்கு ஆதாவளிப்பது போல் நாதஸ்வரக் கலையை வளர்க்க ஒரு கல்லூரியை அமைக்கும் உத்தேச முண்டா ?

பதில்.—இல்லை. ஆனால் சென்னையிலுள்ள கர்னாடகச் சங்கீத மத்தியக் கல்லூரியில் நாதஸ்வரம், தவில் கலைகளில வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

No. But courses of studies in Nagaswaram and Thavul are conducted in the Central College of Karnataka Music, Madras.

Black-marketing in sugar

15 *Q.*—Sri K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Food be pleased to state the number of wholesale sugar dealers, whose licences have been cancelled in Madurai district during 1963, for violation of rules and black-marketing?

A.—
There were no such cases in 1963.

1963–ல் இத்தகைய சம்பவங்கள் எவையும் நிகழவில்லை.

Murrah buffaloes

16 *Q.*—Sri A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Murrah buffaloes given to the Madras State by the Central Government for breeding purposes;

(*b*) the names of persons to whom the animals were distributed; and

(*c*) the price of one buffaloe?

A.—
(*a*) 175 Murrah buffaloe calves.

(b) (i) Sri S. Muthuswamy, Mirasdar, Vidangalur, Valivalam—20.

(ii) Sri P. V. Venkataswamy Naidu, Tiruppur—20.

(iii) The Coimbatore Co-operative Milk Supply Union, Coimbatore—50.

(iv) Sri M. S. Palaniappa Mudaliar, President, Coimbatore Co-operative Milk Supply Union, Coimbatore—85.

(c) Buffaloe calves are supplied free of cost by the Government of India for breeding purposes.

(அ) 175 முர்ரா எருமைக் கன்றுகள்.

23rd January 1965]

(இ) (i) திரு எஸ். முத்துசாமி, மிராசுதாரர், விடங்கனூர், வலிவலம். 20

(ii) திரு. பி. வி. வேங்கடசாமி நாயுடு, திருப்பூர் .. 20

(iii) கோயம்புத்தூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கம், கோயம்புத்தூர். 50

(iv) திரு. எம். எஸ். பழனியப்ப முதலியார், தலைவர், கோயம்புத்தூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கம், கோயம்புத்தூர். 85

(உ) இந்திய அரசாங்கம் இனவிருத்திக்காக எருமைக் கன்றுகளை இலவசமாக வழங்கி வருகின்றது.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. POINTS OF ORDER.

(1) ALLEGED ATTACK ON THE DRAVIDA MUNETRA KAZAGAM BY THE CHIEF MINISTER IN A PUBLIC SPEECH.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, உங்கள் முன்னால் நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். இந்த மன்றத்தினுடைய மரபுகள், சம்பிரதாயங்கள், உரிமைகள், உறுப்பினர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் இவைகள் எல்லாவற்றையும் கடந்த இரண்டு நாட்களாக மிக விலை மதிக்க முடியாதபடி எங்களுக்கு படித்துக் காட்டுகிற தன்மையில் தாங்கள் உரைத்ததையும், நாங்கள் எல்லோரும் அதற்கு ஒத்துழைப்பதாக உறுதி மொழி அளித்ததையும் எல்லோரும் அறிவார்கள். தமிழ்நாடு சட்ட மன்றத்தைப் பொறுத்த வரையில் உண்மையிலேயே நாம் பெருமைப்படக்கூடிய வகையிலும், கவர்னர் அவர்களின் உரையிலே கூட பாராட்டுவதற்குரிய வகையிலும் நடந்து கொண்டிருக்கிறது. இதை இன்னும் செம்மைப்படுத்துவதற்குத் தாங்கள் நல்ல அறிவுரை வழங்கியிருகிறீர்கள். உங்களுடைய அறிவுரையைத் தொடர்ந்து, நேற்றையதினம் இந்த மன்றத்தினுடைய மிகப் பிரதான எதிர்க்கட்சியாக உள்ள, ஆளும் கட்சியாக வருவதற்குரிய ஒரு பெரும் வாய்ப்பு பெற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக . . .

MR. SPEAKER : So far as this issue is concerned, the hon. Member must state the facts precisely and not make an oration A point of order should be brief and to the point.

திரு. கே. ஏ. மதியழகன் : நேற்றைய தினம் இரவு பெரிய மட்டில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் இந்தச் சபையினுடைய சர்க்கார் கட்சித் தலைவராகவும், முதல் அமைச்சராகவும் உள்ளவர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெட்கம் இல்லை, மானம் இல்லை. . .

MR SPEAKER : I am not going to allow all that.

SRI K. A. MATHIALAGAN : I will submit my point.